செ.வெ.எண் 04 நாள்: 06.05.2019

**பெரம்பலூர் மாவட்டம்**

**அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

**இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:**

2019-20ஆம் கல்வியாண்டிற்கு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு முழு நேரம் தொழில்பயிற்சியுடன் கூடிய பட்டயப்படிப்பு சேர மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பட்டயப்படிப்பில் சேர 10ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 2 ஆண்டுகள் தொழில் பயிற்சியில் உரிய பிரிவில் பயின்று தேர்ச்சி அல்லது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கான நேரடி இரண்டாமாண்டு பட்டயச் சேர்க்கை (Diploma Direct Second Year Admission – 2019 - 2010) அமைப்பியல் துறை (Civil), இயந்திரவியல் துறை (Mechanical), மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறை (ECE), மின்னியல் மற்றும் மின்னணுவியல் (EEE), கணிப்பொறியியல் துறை (Computer) உள்ளிட்ட பாடப்பிரிவுகளுக்கு கலந்தாய்வு மூலமாக சேர்க்கை நடைபெற உள்ளது.

இக்கலூரியில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கல்விக்கட்டணம், மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மேலும் மாணவ, மாணவியர்களுக்கு அரசால் வழங்கப்படும் இலவச பேருந்து பயண அட்டையும், அரசு கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படும். மேலும், மாணவ, மாணவியர்கள் தங்கி பயில அரசு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் இலவசமாக விடுதி வசதி உள்ளது. மாணவியர்களுக்கு விரைவில் கல்லூரி வளாகத்தினுள் விடுதி துவங்கப்பட உள்ளது.

கடந்த 2018-2019ஆம் கல்வியாண்டில் கல்லூரி வளாகம் (Campus Interview) மூலமாக சுமார் 100-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் விண்ணப்பக் கட்டணமாக ரூ.150/- செலுத்தவேண்டும். தமிழகத்தை சேர்ந்த எஸ்.சி., எஸ்.டி. மாணவர்கள் தங்களது சுய சான்றொப்பமிட்ட சாதி சான்றிதழ் நகல்களை சமர்ப்பித்து விண்ணப்பங்களை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 10.05.2019 (வெள்ளிக் கிழமை) பிற்பகல் 05.00 மணிக்குள் விண்ணப்பிக்கவேண்டும். மேலும், நேரடி இரண்டாமாண்டு முழு நேரம் கலந்தாய்வு சேர்க்கை 21.05.2019 (செவ்வாய்க் கிழமை) – காலை 10.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணி வரை நடைபெற உள்ளது. மேலும் விவரங்களுக்கு 05328-243200 என்ற எண்ணை தொடர்புகொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.